# சுனாமிக்குப் பிந்திய கரையோரப் புனரமைப்பு மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் - 2012

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகக் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (செல. கூற்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்காக நியாயமாக நம்பிக்கையை வைக்கமுடியும் என்றும்,

(உ) கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவுகள் ரூபா 1,014,694,785 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் ரூபா 3,450,434,799 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| | விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | சிவில் வேலைகள் | 764,342,234 | 661,181,710 | 2,460,173,398 |
| (ii) | மோட்டார் வாகனங்கள், உபகரணம் மற்றும் படகுகள் | 2,975,066 | 17,157,553 | 197,221,635 |
| (iii) | தொழிநுட்ப உதவி மற்றும் கற்கைகள் | 7,145,890 | 13,227,070 | 68,275,436 |
| (iv) | பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | 7,221,205 | 26,701,472 | 75,878,271 |
| (v) | ஒப்பந்த மற்றும் சேவை வழங்குனர் | 28,482,642 | 13,206,661 | 63,317,281 |
| (vi) | நிதி (மீளளிப்பற்ற மானியங்கள்) | 27,241,939 | 5,595,500 | 32,837,439 |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | அதிகரிக்கும் கடன்கள் | 111,122,074 | 13,948,608 | 125,070,682 |
| (viii) | சம்பளங்களும் படிப்பணமும் | 42,821,125 | 43,078,585 | 204,296,637 |
| (ix) | செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 23,342,610 | 20,690,778 | 106,464,936 |
| (x) | கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் மானியச் செலவினம் | எதுவுமில்லை | 31,933,746 | 116,899,084 |
| | மொத்தம் | 1,014,694,785 | 846,721,683 | 3,450,434,799 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான இலங்கை மத்திய வங்கியின் விசேட (டொலர்) கணக்குகளின் செயற்பாடுகளும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காணப்பட்ட மீதியும் கீழே தரப்பட்டுள்ளன.

| | 4429 சீஈ | |
|---|---|---|
| **விபரங்கள்** | **ஐ. அ. டொலர்** | **இலங்கை ரூபா** |
| 2012 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 79,388 | 9,042,457 |
| கூட்டுக :- | | |
| மீள் நிரம்பல்கள் | 4,039,140 | 518,434,311 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்) | - | 6,577,211 |
| | 4,118,528 | 534,053,979 |
| கழி:- | | |
| மீளெடுப்புக்கள் | 3,786,525 | 491,836,206 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 332,003 | 42,217,773 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) வெளிநாட்டுப் பயணங்கள்

(i) 2011 நவம்பரில் ஹொங்கொங்ஹில் நடைபெற்ற தொழிற்திறன் பயிற்சிப் பாடநெறியில் கலந்து கொண்டமைக்கான சிக்கனமான போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 717,763 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்பற்றிருந்த 02 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்காக நிகழ்ச்சித்திட்ட நிதிகளிலிருந்து ரூபா 2,017,638 செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (1) | 2011 ஒக்டோபர் மாதம் மலேசியா கோலாலம்பூர் – விளைவு அடிப்படை முகாமைத்துவ அமுலாக்கல் மற்றும் செயலாற்றல் சுட்டிகள் மீதான கருத்தரங்கு | 03 | 1,118,226 |
| (2) | மீன்பிடி குழுவின் பதின்மூன்றாம் அமர்வு மற்றும் - 2012 யூலையில் இத்தாலி, உரோம், ஐஎப்ஏடீ தலைமையகத்துடனான கலந்துரையாடல் | 02 | 899,412 |
| | | 05 | 2,017,638 |

(iii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது இரு வெளிநாட்டுப் பயணங்களுக்காக இரண்டாம் வகைக்குப் பதிலாக முதலாம்

வகைக்கான உத்தியோகத்தர்களாகக் கருதி நிதி திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.11 ஆம் பிரிவிற்கு முரணாக ஐ.அ.டொ 2640 தொகை இணைந்த படிப்பணத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பாடநெறியில் கல்ந்துகொண்டிராத ஓர் உத்தியோகத்தருக்காக 2011 ஒக்டோபர் 31 முதல் நவம்பர் 18 வரையான காலப்பகுதிக்காக கோலாலம்பூரில் நடாத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவுப் பாடநெறி மீதான பாடநெறிக் கட்டணமாக ரூபா 722,215 (ஐ.அ.டொ 6,500) தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திருகோணமலை மொத்த விற்பனை மீன்சந்தை நிர்மாணிப்பிற்காக தகர்க்கப்பட்ட பழைய கட்டிடத்திற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டிய நீர்ப்பட்டியல் கட்டண நிலுவைத் தொகையான ரூபா 974,869 நிகழ்ச்சித்திட்ட நிதிகளிலிருந்து தீர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அந்தத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயலாற்றல் மற்றும் உத்தரவாத முறிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னரும் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தொகையான ரூபா 881,050 விடுவிக்கப்பட்டதை அடுத்தே திருகோணமலை மீன்பிடி உதவிப் பணிப்பாளர் அலுவலக நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த உத்தரவாத முறிகளின் ஏற்புடைமை ஆராயப்படாததுடன் நிர்மாணிப்பு வேலைகளின் மாதிரிகளின் மாற்றத்தின் காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், வேண்டப்பட்ட உத்தரவாதங்களிற்காக ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மோசடியான ஆவணங்கள் காரணமாக அத்தகைய முறிகள் பணமாக்கப்பட முடியவில்லை.

(ஈ) 2012 ஆகஸ்ட் 13 ஆம் திகதி கடனிலிருந்து மீளளிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஐ.அ.டொ 19,239.88 இற்கான கோரிக்கை 2013 யூலை 13 ஆம் திகதி வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடற்றொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்குக் கையளிக்கப்பட்ட ரூபா 409,340 பெறுமதியான சொத்துக்களின் பெறுவனவு உறுதிப்படுத்தல்கள் அல்லது ஏனைய கையளிப்பு ஆவணங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது நிதிப் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள், கீழே தரப்பட்டுள்ளன.

| | வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ அ டொலர் | இல ரூபா | | | |
| | மில் | மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| ஐஎப்ஏடி | 31.30 | 3,380.02 | 1,050.00 | 1,004.62 | 3,147.98 |
| இலங்கை அரசாங்கம் | 4.37 | 471.96 | 25.20 | 25.17 | 142.52 |
| நலன்விரும்பிகள் | 0.42 | 45.67 | - | - | 20.78 |
| மொத்தம் | 36.09 | 3,897.65 | 1,075.20 | 1,029.79* | 3,311.28* |

* இத் தொகைகள் இவ்வறிக்கைகளின் 4.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட தொகைகளிலிருந்து நிலுவை மீளளிப்புகள் காரணமாக வேறுபட்டிருந்தன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தமாக பயன்படுத்திய நிதிகள் கடன் இல. 664 எல்கே இன் கீழ் 97.6 சதவீதமாகவும் கடன் இல. 693 எல்கே இன் கீழ் 97.6 சதவீதமாகவும் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சிறிய அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதிகள் வழங்கப்படுவதற்கு கடன் இல. 693 எல்கே இன் கீழ் அ.டொ 2.09 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பத்திலிருந்து 7 ஆண்டுகளின் பின்னரும் இவ் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒதுக்கப்பட்ட நிதியில் மகளிர்களுக்கான சிறிய அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதிகள் வழங்கப்படுவதற்கு கடன் இல. 664 எல்கே இன் கீழ் ஐ.அ.டொ 0.67 மில்லியனிலிருந்தும் கடன் இல. 693 எல்கே இன் கீழ் அ.டொ 2.09 மில்லியனிலிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 28.8 சதவீதமும் 42.5 சதவீதமும் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 90 சதவீதமான நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி பூர்த்தியான பின்னர் கடன் இல. 693 எல்கே இன் கீழ் சில கூறுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் போதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இக் கூறுகளின் வேலைகளின் உள்ளடக்கம் ஏனைய கூறுகளின் வெற்றிக்காக தாக்கமளித்ததன் காரணமாக ஏனைய கூறுகளின் செயலாற்றலுக்காக இந் நலிவுகள் உயரிய அளவில் தாக்கமளித்திருந்தன. விபரங்கள் பின்வருமாறாகும்.

| கூறு | ஒதுக்கப்பட்ட தொகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு | பயன்பாட்டு சதவீதம் |
|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் | யூஎஸ் டொலர் | % |
| வாகனங்கள், உபகரணம் மற்றும் படகுகள் | 491,700 | 6,096 | 1.24 |
| தொழிநுட்ப உதவி மற்றும் கற்கைகள் | 298,000 | 16,609 | 5.57 |
| பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | 298,000 | 28,803 | 9.66 |
| | 1,087,700 | 51,508 | 16.47 |

**(அ) பௌதீகச் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாலியல் கொள்கை ஆதரவின் கீழ் பாலியல் அபிவிருத்தி நடவடிக்கை ஆதரவின் கீழ் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவக் கூறு என்பவற்றின் பௌதீக செயலாற்றல் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் 2 கூறுகளின் கீழான 4 நடவடிக்கைகளின் குறிக்கோள்கள் 40 சதவீதம் முதல் 67 சதவீதத்திற்கு இடையிலேயே எய்தப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறாகும்.

| | கூறு | | நடவடிக்கைகள் | இலக்குகள் | உள்ளபடியானது | எய்தப்பட்ட சதவீதம் % |
|---|---|---|---|---|---|---|
| (1) | சிறிய தொழில் முயற்சிகள் மற்றும் நிதி சேவைகள் அபிவிருத்தி | (i) | மாவட்ட நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகுகளினூடாக சிறிய தொழில் முயற்சிகளுக்கான தொழிநுட்ப பயிற்சி (நபர்கள்) | 600 | 400 | 66.7 |
| | | (ii) | நலன்பெறுனர்களுக்கு ஆரம்ப மானியங்களை வழங்குதல் (நபர்கள்) | 1,500 | 600 | 40 |
| | | (iii) | மகளிர் கூட்டுறவு வங்கிகளுடாக மகளிர் சேமிப்புகள் மற்றும் கடனட்டைகளின் ஊக்குவிப்பு (நபர்கள்) | அமுலாக்கப்படவில்லை | | |
| (2) | சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு | | வீடமைப்புத் தேவைகளுக்கான ஏற்பாடு (அலகுககள்) | 100 | 60 | 60 |